RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING | மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 362 | ஜனவரி.1 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5




# 2026ல் நாம் மாபெரும் வெற்றியை நோக்கி முன் செல்கிறோம் : மு.க.ஸ்டாலின்

சென்னை: ஜன.1-

''2026இல் நாம் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய அனைவரும் பெறப்போகும் வெற்றி!'' என்று ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க. ஸ்டாலினின் 2026 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி: பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025க்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026இல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்!

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால் மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் GSDP வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்புநிலை மக்கள், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களால் உயர்தரச் சிறப்பு மருத்துவச் சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025இல் தலைநிமிர்ந்துள்ளோம்! காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

தொகுதி மறுசீரமைப்பு ஆபத்தை எதிர்த்து அகில இந்திய அளவில் அணிதிரட்டல், சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் சூழ்ச்சியில் இருந்து நம் மக்களின் வாக்குரிமையைக் காப்பது, மாநில சுயாட்சிக்காக உயர்நிலைக் குழு அமைத்தது, மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டது, கல்வி நிதிக்காக ஒன்றிய அரசிடம் உரிமைக்குரலை எழுப்பியது, ஆளுநரின் அதிகார மீறலுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்றது என வழக்கம் போல இந்த ஆண்டும் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கும் குறைவே இல்லை. மொத்தத்தில் தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உலகத்துக்குப் பறைசாற்றிய ஆண்டுதான் 2025!

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026இல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப்போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# “தமிழகத்தில் கஞ்சாவே இல்லையா?” மா.சுப்பிரமணியத்துக்கு இபிஎஸ் சரமாரி கேள்வி

சென்னை, ஜன.1-

"'தமிழகத்தில் கஞ்சாவே இல்லை' என்று வெட்கமே இன்றி கூறும் அமைச்சர் மா.சுப்பிரமணியத்துக்கு, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இருந்த 3 அடி கஞ்சா செடி தெரியவில்லையா?" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "திருத்தணி ரயில் நிலையத்தில் நின்றுக் கொண்டிருந்த ஒரு சாமானியர் மீது 2 இளைஞர்கள் சரமாரியாக தாக்கியதாக செய்திகள் வருகின்றன. அதேபோல், திருப்பூரில் போதை இளைஞர் ஒருவர், காவலரை கத்தியுடன் நடுரோட்டில் விரட்டிய செய்தியும் அதிர்ச்சி அளிக்கின்றன.

போதைப் பொருள் புழக்கமும், போதை இளைஞர்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்கு சீர்கேடும் தினசரி செய்தியாகி இருப்பதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் முதல்வர்? அடுத்த நொடி யார், எந்த போதையில் நம்மைத் தாக்கப் போகிறார் என்ற உயிர் பயத்திலேயே தமிழக மக்கள் வாழ வேண்டுமா?

'தமிழ்நாட்டில் கஞ்சாவே இல்லை' என்று வெட்கமே இன்றி கூறும் மாரத்தான் அமைச்சருக்கு (மா.சுப்பிரமணியம்), ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இருந்த 3 அடி கஞ்சா செடி தெரியவில்லையா?

கடந்த ஒரு வாரத்தில் மட்டும், நாகப்பட்டினத்தில் 140 கிலோ, ராமநாதபுரத்தில் 564 கிலோ, திருச்சியில் 4 கிலோ என தமிழகத்தில் பிடிப்பட்டுள்ள கஞ்சா குறித்த செய்திகள் எல்லாம் இந்த அமைச்சருக்கும், அவரின் தலைவரான முதல்வருக்கும் தெரியாதா என்ன?

போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், சட்டம் ஒழுங்கைக் காக்க முடியவில்லை என்றால், எதற்கு நீங்கள் ஆட்சியில் இருக்கிறீர்கள்?

நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியாத திறனற்ற முதல்வரிடம் சிக்கித் தமிழ்நாடு தவித்தது போதும். 2026, திமுக ஆட்சியிடம் இருந்து தமிழகம் விடுதலை பெறும் ஆண்டாக அமையட்டும்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# “காங்கிரஸ் விவகாரத்தில் தோழமை கட்சிகள் தலையிட வேண்டாம்'' செல்வப்பெருந்தகை

சென்னை, ஜன.1-

காங்கிரஸ் விவகாரத்தில் தோழமைக் கட்சிகள் தலையிட வேண்டாம் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை வலியுறுத்தியுள்ளார்.



கடந்த சில வாரங்களுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி தவெக தலைவர் விஜய்யை சந்தித்துப் பேசியிருந்தார். இச்சமபவம் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இதனால் திமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து காங்கிரஸ் கட்சி விலக உள்ளதாக தகவல் வெளியானது. இதையொட்டி, காங்கிரஸ் தலைமை தரப்பில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இருப்பினும் திமுக கூட்டணி கட்சிகள் இவ்விவகாரம் குறித்து பொதுவெளியில் பேசி வந்தது சர்ச்சையானது.

இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப் பெருந்தகை செய்தியாளர்களிடம் பேசியதாவது, "எங்கள் கட்சி பிரச்சினையை நாங்கள் பேசி தீர்த்துக்கொள்வோம். தமிழ்நாடு அரசுக்கு எதிராகவோ, பாஜகவுக்கு ஆதரவாகவோ யாராவது பேசினால் அந்தப் புகாரை எங்கள் தலைமையிடம் தெரிவிப்போம், தெரிவித்து விட்டோம். இது குறித்து அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என முழுமையாக நம்புகிறோம்.

திமுக காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும், தோழமை கட்சிகளும் உட்கட்சி விவகாரத்தில் பிரச்சினையை ஏற்படுத்த வேண்டாம். தோழமைக் கட்சிகள் இதை இத்தோடு விட்டுவிட வேண்டும். இதை பெரிதுப்படுத்த வேண்டாம்'' என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, "ஒரு கூட்டணி கட்சியின் உட்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது. சிபிஐ, சிபிஎம் ஆகியவற்றின் தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும், கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வைகோ, திருமாவளவன் ஆகியோர் கூட்டணி கட்சிகளுடன் நடக்கும் விஷயங்களில் "லக்ஷ்மண் ரேகை"யை மதிக்குமாறு தங்களது எம்.பிக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்'' என காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் வலியுறுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆபரேஷன் சிந்தூரின்போது மத்தியஸ்தம் செய்ததாக சீனா அறிவிப்பு : இந்தியா திட்டவட்ட மறுப்பு

புதுடெல்லி, ஜன.1-

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை எடுத்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ததாக சீனா கூறி உள்ள நிலையில் இந்தியா அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. கடந்த ஏப்ரல் 22ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்தது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இந்தியா அந்த நாட்டுக்கு எதிராக ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் குறிவைக்கப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டன. இதில், ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, இந்தியா மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தியா கொடுத்த பதிலடியில் அந்த நாட்டின் விமானப் படைத் தளம் கடுமையாக சேதமடைந்தது. இந்தியாவின் பதிலடி தீவிரமாக இருந்ததை அடுத்து, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் (டிஜிஎம்ஓ), இந்திய டிஜிஎம்ஓவை தொடர்பு கொண்டு போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகோள் விடுத்தார். இதை இந்தியா ஏற்றது. இதையடுத்து, போர் முடிவுக்கு வந்தது. இதை இந்திய ராணுவம் அப்போதே செய்தியாளர்களிடம் விளக்கியது. எனினும், இந்தியா பாகிஸ்தான் போரை தான் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பலமுறை கூறினார். எனினும், இந்திய வெளியுறவுத் துறை அதனை தொடர்ந்து மறுத்து வருகிறது. இந்நிலையில், போரின்போது பாகிஸ்தானுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவிய சீனா, இந்தியா பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வர தாங்கள் மத்தியஸ்தம் செய்ததாக கூறி உள்ளது.

நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி, ''இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முன் எப்போதும் இல்லாத அளவாக இந்த ஆண்டு உள்ளூர் போர்களும் எல்லை தாண்டிய மோதல்களும் அடிக்கடி வெடித்தன. நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் சீனா தொடர்ந்து ஈடுபட்டது. வடக்கு மியான்மர், ஈரான் அணுசக்திப் பிரச்சினை, இந்தியா பாகிஸ்தான் இடையேயான பதட்டம், இஸ்ரேல் பாலஸ்தீனம் பிரச்சினை, கம்போடியா தாய்லாந்து பிரச்சினை ஆகியவற்றில் நாங்கள் மத்தியஸ்தம் செய்தோம்'' என்று கூறி இருந்தார். வாங் யியின் கூற்றை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. ''இதுபோன்ற கூற்றுக்களை நாங்கள் ஏற்கனவே மறுத்துள்ளோம். இந்தியா பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு பிரச்சினைகளில் மூன்றாம் தரப்புக்கு எந்த பங்கும் இல்லை. இந்தியா பாகிஸ்தான் போர் நிறுத்தம் என்பது இரு நாடுகளின் டிஜிஎம்ஓக்களுக்கு இடையே நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. இது குறித்து எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் பலமுறை தெளிவுபடுத்திவிட்டோம்'' என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# 2025ல் இந்தியாவில் நடைபெற்ற மாற்றங்கள், சாதனைகளை பட்டியலிட்டு சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவு

புதுடெல்லி, ஜன.1-

2025ம் ஆண்டு நிறைவை ஒட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி நேற்று விரிவான பதிவு வெளியிட்டுள்ளார்.



அதில் கூறியிருப்பதாவது: நாட்டின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளாக பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு 2025ம் ஆண்டில் மிகப் பெரிய சீர்திருத்தங்கள் அமல் செய்யப்பட்டன. இது, இந்தியாவின் ஆண்டாக நினைவு கூரப்படும்.

குறிப்பாக 2025ம் ஆண்டில் ஜிஎஸ்டி வரி விகிதத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. 5% மற்றும் 18% என்ற இரு விகிதங்கள் மட்டும் அமல் செய்யப்பட்டு உள்ளன. இதனால் அனைத்து வீடுகளிலும் பட்ஜெட் சுமை குறைந்திருக்கிறது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், விவசாயிகள் நிறைவான பலன்களை அடைந்து வருகின்றனர். பண்டிகை காலங்களில் அனைத்து பொருட்களின் விற்பனையும் கணிசமாக அதிகரித்தது.

2025ம் ஆண்டில் தனிநபர் வருமான வரி விலக்கு உச்ச வரம்பு ரூ.12 லட்சமாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. வருமான வரிச் சட்டம் 1961க்கு பதிலாக வருமான வரிச் சட்டம் 2025 நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன் மூலம் வரி நடைமுறையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டு உள்ளது. ரூ.100 கோடி வரை வருமானம் ஈட்டும் நிறுவனங்கள், சிறு நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. இந்திய காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

கடல்சார் வணிகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் 5 முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இதன் மூலம் கடல்சார் வணிகம் கணிசமாக அதிகரிக்கும். காலத்துக்கு பொருந்தாத 71 பழைய சட்டங்கள் நீக்கப்பட்டு உள்ளன.

நாடு முழுவதும் எளிதாக வணிகம் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக மின்னணு, ஆட்டோ மொபைல் உட்பட பல்வேறு துறைகளில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து, ஏற்றுமதியும் கணிசமாக அதிகரித்து வருகிறது.

29 பழைய தொழிலாளர் சட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, புதிதாக 4 தொழிலாளர் சட்டங்கள் அமல் செய்யப்பட்டு உள்ளன. இதன்மூலம் பெண்கள், அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு உள்ளன. அதேநேரம் தொழில் துறையின் வளர்ச்சியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய அணு சக்தி துறையில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க வகை செய்யும் புதிய அணுசக்தி சட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் இந்திய அணு சக்தி துறை அபார வளர்ச்சி அடையும். ஹைட்ரஜன் எரிசக்தி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

புதிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டம் (ஜி ராம் ஜி) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஊரக பகுதி மக்களுக்கான வேலைவாய்ப்பு 100 நாட்களில் இருந்து 125 நாட்களாக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

யுஜிசி, ஏஐசிடிஇ, என்சிடிஇ உள்ளிட்ட உயர் கல்வி அமைப்புகளை ஒன்றிணைத்து இந்திய உயர் கல்வி ஆணையம் அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும்.

மத்திய அரசின் சீர்திருத்தங்களால் சிறு வணிகர்கள், இளம் தொழில்நுட்ப நிபுணர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்க மக்கள் என அனைத்து தரப்பினரும் பலன் அடைந்து வருகின்றனர். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்





# வேலூரில், பிப்ரவரி 2026ல் அக்னிவீரர் இராணுவத்தில் ஆள்சேர்ப்பு குறித்து ஆட்சியர் தலைமையில் முன்னேற்பாடு பணிகள் ஆய்வுக் கூட்டம்

வேலூர், ஜன.01-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், வேலூர் மாவட்டத்தில், பிப்ரவரி 2026ல் அக்னிவீரர் இராணுவத்தில் ஆள்சேர்ப்பு நடைபெறுவது குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் முன்னேற்பாடு பணிகள் ஆய்வுக் கூட்டம், காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் சம்மந்தப்பட்ட அனைத்து துறை ஒருங்கிணைப்பாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ராணுவ அதிகாரிகள் கர்னல் வாசிம் அஹ்மத், சுபேதார் அனுப்குமார், நாய்க் சுபேதாரர் தர்மேந்திரகுமார், இராணுவ அலுவலர்கள் பணியாளர்கள், இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) ஜெயசித்ரா, வேலூர் ஆர்டிஓ செந்தில்குமார், தீயணைப்பு துறை வேலூர் காட்பாடி பொறுப்பு நிலைய அலுவலர் முருகேசன் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு துறைகள் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி எல்கைக்குட்பட்ட ஆத்துவழி குளத்தில்

# மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே கமல்கிஷோர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

தென்காசி, ஜன.01-

தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி எல்கைக்குட்பட்ட ஆத்துவழி குளத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே கமல்கிஷோர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் (2025 -2026) ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாட்டில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரிக்கும் விதமாக 5000 ஹெக்டேர் அளவிலான பஞ்சாயத்து குளங்களில் ஒரு ஹெக்டேருக்கு 2000 மீன் குஞ்சுகள் வீதம் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்படவுள்ளது. அதாவது 400 ஹெக்டேரில் 8 இலட்சம் மீன் விரலிகள் இருப்பு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட வாசுதேவ நல்லூர் மற்றும் சங்கரன் கோவில் பகுதியில் உள்ள 400 ஹெக்டேர் அளவிலான ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்கள் தேர்வு செய்யப்பட்டு மீன் விரலிகள் இருப்பு செய்யப்படும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே கமல்கிஷோர், தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (மண்டலம்) தூத்துக்குடி, இணை இயக்குநர் திரு. இளம்வழுதி, திருநெல்வேலி, உதவி இயக்குநர், திரு.ப.மோகன்ராஜ், (தென்காசி), ஆய்வாளர், சு.பாலமுருகன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# இந்திய மாணவர் சங்கத்தின் 56ஆவது அமைப்பு தினத்தை முன்னிட்டு மாணவர் சங்கத்தினர் போதை ஒழிப்பு பேரணிகருத்தரங்கம்

புதுக்கோட்டை, ஜன.01-

இந்திய மாணவர் சங்கத்தின் 56ஆவது அமைப்பு தினத்தை முன்னிட்டு இந்திய மாணவர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்டக்குழு சார்பில் புதன் கிழமை புதுக்கோட்டையில் போதை ஒழிப்பு பேரணி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.

புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகே தொடங்கிய பேரணியை சங்கத்தின் மாநில இணைச் செயலாளர் ஜி.கே.மோகன் தொடங்கி வைத்தார். பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாக புதிய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள அறிவியல் இயக்க அரங்கில் நிறைவடைந்தது.

அங்கு நடைபெற்ற கருத்தரங்கிற்கு மாவட்டத் தலைவர் எம்.வாசுதேவன் தலைமை வகித்தார். 'போதை ஒழிப்புபில் மாணவர்களின் பொறுப்பு' என்ற தலைப்பில் காவல் ஆய்வாளர் சுகுமாறன், 'நீயும் தலைவன்' என்ற தலைப்பில் கவிஞர் எம்.எஸ். கலந்தார், 'அமைப்பின் வரலாறு' என்ற தலைப்பில் சங்கத்தின் மாநில இணைச் செயலாளர் ஜி.கே.மோகன், எதிர்காலக் கடமைகள் என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் ஆர்.வசந்தகுமார் ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக மாவட்ட துணைத் தலைவர் பிரியங்கா வரவேற்க, செயற்குழு உறுப்பினர் காவியன் நன்றி கூறினார். மாநில செயற்குழு உறுப்பினர் மகாலெட்சுமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் நந்தனா, சஞ்சைபாரதி, நதுமிதா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.





# தேவகோட்டையில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட மாநாடு

தேவகோட்டை, ஜன.01-

சிவகங்கை மாவட்டத்தின் தமிழ்நாடு அறிவியல் இயக்க 18 ஆவது மாநாடு தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் கவிஞர் தமிழ்க்கனல் அறிவியல் பாடல் பாடினார். கல்லூரியின் முதல்வர் அருள்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் மாநாட்டை தொடக்கி வைத்து பேருரையாற்றினார்.

முதல் அமர்வில் அறிவியலை அறிவோம் அறிவியலால் இணைவோம் என்ற கருப்பொருளில் கருத்தரங்கம் நடைபெற்றது. கண்ணங்குடி கிளைச் செயலாளர் குருமூர்த்தி வரவேற்றார். மாவட்டத் துணைத்தலைவர் முனைவர் சேவற்கொடியோன் தலைமை உரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் ராசு அறிமுக உரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் நோக்கவுரையாற்றினார். மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் முனைவர் சந்திரமோகன் மற்றும் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் கருத்துரை வழங்கினர். தேவகோட்டை நகர் மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தங்கள் பள்ளிகளில் அதிகமான மாணவ மாணவிகளை துளிர் திறனறிதல் தேர்வில் பங்குபெற வைத்த ஆசிரியர்களுக்கு துளிர் சேவை விருது வழங்கி சிறப்பித்தார். தேவகோட்டை நகர் மன்ற துணைத் தலைவர் ரமேஷ் வாழ்த்துரை வழங்கினார். தேவகோட்டை கிளைச் செயலாளர் கார்த்திகேயராஜா நன்றி கூறினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரதிநிதிகள் மாநாட்டிற்கு மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் மாவட்டத் துணைத் தலைவர் பாபா அமீர் பாதுஷா கூட்டு தலைமை ஏற்றனர். மாவட்டத் துணைத் தலைவர் எட்வின் துணைச் செயலாளர் குழந்தை ஆரோக்கியமேரி முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயற்குழு உறுப்பினர் முத்து ராமசாமி வரவேற்புரையாற்றினார். இந்த வருடம் அதிகமான மாணவ மாணவிகளை துளிர் திறனறிதல் தேர்வில் பங்குபெற செய்த பள்ளிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி செயல் அறிக்கையை சமர்ப்பித்தார். மாவட்டப் பொருளாளர் பிரபு வரவு செலவு அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கை மீதான விவாதங்கள் நடைபெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கிளை நிர்வாகிகள் சையது மணவாளன் கிருஷ்ணவேணி டென்சிங் அருள்ராஜ் மெஹர் பானு ஜெயப்பிரியா நாகரத்தினம் சித்திரைச்செல்வி சத்தியமூர்த்தி தமிழரசன் கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட புதிய தலைவராக ஆரோக்கியசாமி செயலாளராக பிரபு பொருளாளராக சாஸ்தா சுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். துணைத் தலைவர்களாக கோபிநாத் ஜீவானந்தம் பாபா அமீர் பாதுஷா சகாய ஜோசப் சேவியர் சேவற்கொடியோன் ராசு ஆகியோரும் துணைச் செயலாளர்களாக ஆரோக்கியமேரி முத்து இராமசாமி பாலகிருஷ்ணன் முருகானந்தம் சித்ரா ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகள் பட்டியலை மாநில செயலாளர் முத்துலட்சுமி வாசித்தார். காளையார்கோவில் கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை நன்றியுரை ஆற்றினார். வானவில் மன்ற கருத்தாளர்கள் ஆசிரியர்கள் லதாசுமதி காந்திமதி சாந்திவிநாயகம் அன்பரசன் ஜீவானந்தம் போஸ் ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.








# மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணி இணைந்து நடத்தும் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது

மதுரை, ஜன.01-

மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணி இணை ந்து நடத்தும் இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நேற்று முன்தினம் நடைபெற்றது. மதுரை ரிசரவ் லைன் தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணியிலிருந்து .. தமிழ்நாடு சிறப்பு காவல் படையைச் சேர்ந்த 150 காவலர்கள். தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்து இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.. இந்த இருசக்கர வாகன விழிப்புணர் பேரணியானது ரிசரவ் லைனில் இருந்து புறப்பட்டு ஆத்திகுளம் நாராயணபுரம் ஐயர் பங்களா மார்க்கமாக யாதவா பெண்கள் கல்லூரி வரை சென்று மீண்டும் அதை மார்க்கமாக மீண்டும் ரிசரவ் லைன் ல் வந்து நிறைவு பெற்றது. இந்த நிகழ்வினை.. மதுரை மாநகர போக்குவரத்து துணை ஆணையர் எஸ்.வனிதா துவங்கி வைத்தார்கள் .தமிழ்நாடு காவல் சிறப்பு கடை ஆறாம் அணியின் தளவாய் ஆனந்தன் துணை தளவாய் தாமஸ் உதவி தளவாய்கள் சுந்தர ஜெயராஜ், மான் சிங்.. போக்குவரத்து உதவி ஆணையர் இளமாறன். காவல் ஆய்வாளர் தங்கமணி, பஞ்சவர்ணம்.மற்றும் 150 காவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திராவிட வெற்றிக் கழகம் வேலூர் மாநகர செயலாளராக ஜெ.ஈஸ்வரி ஜெயக்குமார் நியமனம்



காட்பாடி, ஜன.01-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கேய நல்லூரில் ஜெ.ஈஸ்வரி ஜெயக்குமார் வசித்து வருகின்றனர். ஜெயக்குமார் மற்றும் ஈஸ்வரி பல்வேறு சமூகப் பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் தற்போது, திராவிட வெற்றிக் கழக நிறுவன தலைவரும், தலைமை ஒருங்கிணைப்பாளருமான மல்லை. சி.ஏ.சத்யா தலைமையில், திராவிட வெற்றிக் கழகம், வேலூர் மாநகர செயலாளராக ஜெ.ஈஸ்வரி ஜெயக்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர் மக்கள் நலப் பணியில் ஈடுபடுவதோடு, மக்களால் மக்களுக்காக மாமன்ற உறுப்பினர் வேட்பாளராகவும் களமிறங்கி பல்வேறு சமூகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு திராவிட வெற்றிக் கழக கட்சி வேலூர் மாவட்ட மற்றும் மாநில அளவில் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.




■ மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று திரும்பி சென்றதையொட்டி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் புத்தகம் வழங்கி வழியனுப்பி வைத்தார்.

# "போதை பொருட்களின் நடமாட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்" டிடிவி தினகரன்

**சென்னை, ஜன.01–**

இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் புழக்கத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் கடுமையான நடவடிக்கைகளின் மூலம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக தமிழகம் மாறியிருப்பதாக மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நடப்பாண்டில் சென்னை மண்டலத்தில் மட்டும் சுமார் 2,300 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவும், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 102 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக காவல்துறையின் வடக்கு மண்டல ஐ.ஜி அஸ்ரா கார்க்கும் தெரிவித்திருக்கும் நிலையில், தமிழகம் போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாக மாறியிருப்பதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியிருக்கும் தகவல் முழு பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயலாக அமைந்துள்ளது.

திருத்தணி ரயில்நிலையம் அருகே கஞ்சா போதை தலைக்கு ஏறிய நிலையிலிருந்த சிறுவர்கள் சிலர், வடமாநில இளைஞர் ஒருவர் மீது நடத்திய கொலைவெறித் தாக்குதலின் தாக்கம் அடங்குவதற்கு முன்பாகவே, திருப்பூர் அருகே கோயில் திருவிழா ஒன்றில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தலைமைக் காவலரை, போதை இளைஞர் ஒருவர் கத்தியைக் காட்டி விரட்டிய சம்பவம், தமிழகத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டம் எந்தளவிற்கு வேரூன்றியிருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

பள்ளி, கல்லூரி மாணவர்களைக் குறிவைத்து விற்பனை செய்யப்படும் கஞ்சா உள்ளிட்ட கொடியவகை போதைப் பொருட்களின் நடமாட்டத்தைத் தடுக்கத் தவறியதன் விளைவே, சக மனிதர்களையே பட்டாக் கத்தியால் தாக்கி, துன்புறுத்தி அதனை வீடியோவாக பதிவு செய்து சமூக வலைத்தளங்களின் மூலம் பரப்பும் அளவிற்கான கொடூரமான மனநிலையை உருவாக்கியுள்ளது.



எனவே, தமிழகம் முழுவதும் பரவியிருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கிடுவதோடு, இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் போதைப் பொருட்களை விற்பனை செய்வோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத் துகிறேன்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# புத்தாண்டை புத்தகங்களுடன் கொண்டாடிய வாலிபர் சங்கத்தினர்

புதுக்கோட்டை, டிச.31-

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் புதுக் கோட்டை மாநகரக் குழுவும், பாரதி புத்தகாலயமும் இணைந்து ஆங்கிலப் புத்தாண்டை புத்தகங்களுடன் வரவேற்றுக் கொண்டாடினர்.

புதுக்கோட்டை அண்ணாசிலை அருகே டிச.31, ஜன.1 ஆகிய இரண்டு தினங்கள் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி புத்தக விற்பனை இயக்கம் நடபெற்று வருகிறது. இந்த விற்பனை இயக்கத்தை சங்கத்தின் முன்னாள் மாவட்டச் செலாளர் எஸ்.சங்கர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன், அறிவியல் இயக்க மாநிலக்குழு உறுப்பினர் அ.மணவாளன், சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.ஜனார்த்தனன், செயலாளர் ஆர்.மகாதீர், மாநகரத் தலைவர் தீபக், பொருளாளர் ராமு, மாவட்டக்குழு உறுப்பினர் நித்திஷ், நகரக்குழு உறுப்பினர்கள் முரளி, புவனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# திருச்சுழி வட்டாரப்பகுதிகளில் அரசின் பல்வேறுத்துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார்

விருதுநகர், ஜன.01-

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரப்பகுதிகளில் அரசின் பல்வேறுத்துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா வழங்கினார்.

அதன்படி, திருச்சுழி வட்டம் குலசேகரநல்லூர் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து மகளிர் சுய உதவி குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மசாலா தயாரிப்பு தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ. சுகபுத்ரா, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து, திருச்சுழி வட்டம் குலசேகரநல்லூர் ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உற்பத்தி பொருட்களை கொள்முதல் மற்றும் விற்பனை செய்ய ஏதுவாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டி மானியத்தில் வாங்கப்பட்ட சரக்கு வாகனத்தினையும் திருச்சுழி வட்டம் குலசேகரநல்லூர் ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், சென்னிலைகுடி ஊராட்சியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் 2023-2024ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ.7.91 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 100 வீடுகளை தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு குலுக்கல் மூலம் ஒதுக்கீடு செய்யும் பணிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.வீ.கேசவதாசன் மற்றும் திட்ட இயக்குநர் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்) திரு.ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல், அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் திரு.மாரி முத்து, வட்டாட்சியர், அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# அமைச்சர் கேஆர். பி. பிறந்தநாள் விழா.. சிவகங்கை அன்னை முதியோர் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கி கொண்டாடினர்

## பில்லூர் கிளைக்கழக திமுக செயலாளர் வழக்கறிஞர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை, ஜன.01-

சிவகங்கை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பிறந்தநாளை முன்னிட்டு தொடர்ந்து 6 வது ஆண்டாக இந்த வருடமும் அன்னை முதியோர் இல்லத்தில் அறுசுவை காலைச் சிற்றுண்டி வழங்கி பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது ஒருங்கிணைந்த சிவகங்கை ஒன்றிய திமுக முன்னாள் பொருளாளர் சக்கந்தி காஜா மைதீன், ஒன்றிய துணைச் செயலாளர் வில்லிபட்டி பண்ணையார் ஆ. இராமமூர்த்தி, மாவட்ட திமுக தொண்டரணி துணை அமைப்பாளர், ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினர் வண்டவாசி கா. கோவிந்தராஜன், இலந்தங்குடி திமுக கிளைக்கழக செயலாளர் பொன்னழகு என்ற ஏழுமலை, ஒருங்கிணைந்த சிவகங்கை ஒன்றிய திமுக மாணவரணி முன்னாள் அமைப்பாளர் முடிகண்டம் ஆனந்தக்குமார் சிவமூர்த்தி, அழுபிள்ளைதாங்கி திமுக கிளைக்கழகச் செயலாளர் சபரிநாதன், போக்குவரத்து தொமுச தடியப்பன் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பில்லூர் கார்த்தி கூறும்போது எங்கள் மாவட்ட முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருஷ்ணன் அடுத்தாற்போல எங்களை அரவணைத்து கழகப் பணியாற்றி வருபவர் எங்களது மாவட்டத்தின் எந்நாளும் எங்கள் அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் நீடூழி வாழ வேண்டுமென மனதார வாழ்த்துவதாகக் கூறினார்.

# புதுச்சேரியில் ரூ.800 மதிப்பில் பொங்கல் பொருள் தொகுப்பு - ரேஷனில் ஜன.3 முதல் விநியோகம்

புதுச்சேரி, ஜன.01–



புதுச்சேரி அரசின் சார்பில், ரூ.800 மதிப்புள்ள பொங்கல் பொருட்கள் தொகுப்பு ஜன. 3ம் தேதி முதல் விநியோகம் செய்யப்பட உள்ளது. துச்சேரி யூனியன் பிரதேசத்தில் புதுச்சேரி, காரைக்கால், மாஹே. ஏனாம் ஆகிய 4 பிராந்தியங்களிலும் அரசு ஊழியர்கள். கவுரவ ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களைத் தவிர்த்து மொத்தம் 3.48 லட்சம் ரேஷன் அட்டைகளுக்கு இந்தப் பொங்கல் பரிசு தொகுப்புகள் ரேஷன் கடைகளின் வாயிலாக விநியோகம் செய்யப்படுகிறது.

இந்தத் தொகுப்பில் 4 கிலோ பச்சரிசி, 1 கிலோ நாட்டு சர்க்கரை, 1 கிலோ பாசி பருப்பு, 300 கிராம் நெய், 1 கிலோ சூரியகாந்தி எண்ணெய் ஆகியன இருக்கும். புதுச்சேரி மாநில கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு நிறுவனம் (கான்பெட்) இதைக் கொள்முதல் செய்து வழங்குகிறது. இதற்காக அரசுக்கு கூடுதலாக ரூ.26 கோடி செலவாகும். மேலும். இதில் கூட்டுறவு பால் நிறுவனமான பாண்லேவில் இருந்து நெய் விநியோகம் செய்ய அந்த நிறுவனத்துக்கு ரூ.8.75 கோடி அளிக்கப்படுகிறது.

இலவச கோதுமை: புதுச்சேரி பிராந்தியத்தில் 2,63,386 ரேஷன் கார்டுகள், காரைக்காலில் 60,225. மாஹேவில் 7,981, ஏனாமில் 15,498 என மொத்தம் 3,47,090 ரேஷன் கார்டுகள் உள்ளன. இந்த ரேஷன் கார்டுகளுக்கு புதிதாக மாதந்தோறும் 2 கிலோ இலவச கோதுமை விநியோகம் செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



# பாரிமுனையில் 500 ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்: வியாபாரிகள் சாலை மறியல்

சென்னை, ஜன.01-

நீதிமன்ற உத்தரவுப் படி, பாரிமுனையில் 500க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றப்பட்டன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வியாபாரிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை பூக்கடை, பாரிமுனை என்எஸ்சி போஸ் சாலை நடைபாதையில் 500க்கும் மேற்பட்ட கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்தன. இதனால் அந்த பகுதியில் அரசு பேருந்துகள், கார் உள்பட அனைத்து விதமான வாகனங்களும் செல்வதில் சிரமம் இருந்தது. இதனால், எப்போதும் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற வேண்டும் என வலியுறுத்தி நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட நீதிமன்றம், சாலையை ஆக்கிரமித்துள்ள கடைகளை அகற்ற வேண்டும் என மாநகராட்சிக்கு உத்தரவிட்டது. இருப்பினும், இந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது.

இதையடுத்து, நீதிமன்றம் மீண்டும் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அதில், ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றி, அதுகுறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இதையடுத்து, சென்னை மாநகராட்சி ராயபுரம் மண்டல பகுதி செயற்பொறியாளர் பழனி, உதவி செயற்பொறியாளர் கண்ணன், உதவி பொறியாளர் கார்த்திக் தலைமையில் மாநகராட்சி ஊழியர்கள் ஜேசிபி இயந்திரம், பொக்லைன், உதவியுடன் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்கள், ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றும் பணியில் நேற்று ஈடுபட்டனர். இதனால் பூக்கடை பகுதியில் பரபரப்பு நிலவியது. அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க பூக்கடை துணை ஆணையர் சுந்தர வடிவேல் உத்தரவின் பேரில் உதவி ஆணையர் தட்சிணாமூர்த்தி தலைமையில் ஆய்வாளர்கள் புஷ்பராஜ், பிரபு, மனோன்மணி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

அசம்பாவிதங்கள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக அவர்களை அழைத்துச் செல்ல ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனமும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. இதற்கிடையே, ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து கடை உரிமையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் என்எஸ்சி போஸ் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் அவர்களை கலைந்து செல்லும்படி அறிவுறுத்தினர். அவர்கள் கேட்காததால் குண்டுக்கட்டாக அகற்றப்பட்டனர். இதனால், போலீஸாருக்கும், வியாபாரிகளுக்கும் இடையே வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால், அந்த பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

# பிச்சாவரம் படகு இல்லத்தில் தமிழ்நாட்டின் முதல் சூரியஆற்றல் மின்படகு சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கிவைத்தார்

கடலூர், ஜன.01-

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் முன்னெடுப்பாக மாநிலத்தின் முதல் காலநிலை மீள்திறன்மிகு கிராமம் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிள்ளை பேரூராட்சியில் தமிழ்நாட்டின் முதல் சூரியஆற்றல் மின்படகு சேவையினை பிச்சாவரம் படகு இல்லத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.



தொடர்ந்து, காலநிலை மீள்திறன்மிகு கிராமத் திட்டத்தின் வாயிலாக கிள்ளை பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளாக பல்வேறு மாவட்டங்களில் 11 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதியாக கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்திற்குட்பட்ட கிள்ளை பேரூராட்சி இடம்பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கிள்ளை பகுதியினை பசுமை வளாகமாக மேம்படுத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் வனத்துறை, மீன்வளத்துறை, நீர்வளத்துறை ஆகிய துறைகளின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பிச்சாவரம் படகு இல்லத்தில் எரிபொருள் பயன்பாட்டை முற்றிலும் தவிர்த்து, காற்று மற்றும் நீர் மாசுபாட்டை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமை சுற்றுலாவாக ஏற்படுத்திடும் வகையிலும், காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை எதிர்கொள்ளும் கிராமங்களின் மீள்திறன்மிகு வளர்ச்சியை வலுப்படுத்திடவும் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் 100% சூரிய ஆற்றலால் இயக்கப்படும் மின்படகு சேவையினை சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

காலநிலை மீள்திறன் கிராம அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதையும், கிள்ளை பகுதியில் பக்கிங்காம் கால்வாய் தூர்வாரி புனரமைக்கப்பட்டுள்ளதையும், சதுப்புநில காடுகளை மேம்படுத்தும் விதமாக அலையாத்தி செடிகள் நடவு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருவதையும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிள்ளை பகுதியில் உள்ள பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் அலையாத்தி காடுகளில் தேன் உற்பத்தியினை மேற்கொள்ளும் பொருட்டு தேன் உற்பத்திக் கூடுகள் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதை ஆய்வு செய்யப்பட்டது. காலநிலை மீள்திறன்மிகு கிராமம் திட்டத்தின் கீழ், இருளர் பழங்குடியினர் கிராம மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பாக மொத்தம் 50 தேனீ பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் உற்பத்தி செய்யப்படும் தேனை சுற்றுலா பயணிகளிடம் விற்பனை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், பொருளாதாரம், சமூக பங்கேற்பு ஆகிய மூன்றையும் ஒருங்கிணைந்து காலநிலை மீள்திறன்மிகு கிராமமாக கிள்ளை பகுதியை மாற்றுவதற்கான அனைத்து பணிகளையும் துறை சார்ந்த அலுவலர்கள் ஒருங்கே மேற்கொண்டு முன்மாதிரி கிராமமாக உருவாக்கிட துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

ஆய்வின் போது உதவி வன பாதுகாவலர் இக்பால், மாவட்ட சுற்றுலா அலுவலர் கண்ணன், உதவி இயக்குநர் மீனவளத்துறை நித்திய பிரியதர்ஷினி, உதவி வனப் பாதுகாவலர் இக்பால், மாவட்ட பசுமைத் தோழர் மணிவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொதுக்குழு கூட்ட விவகாரம்: ராமதாஸ், அன்புமணி ஆதரவாளர்கள் திண்டிவனத்தில் மோதல்

**சேலம், ஜன.01–**

சேலத்தில் நடைபெற்ற பாமக பொதுக்குழு கூட்டத்தில் ராமதாஸின் பேரனும், ஸ்ரீகாந் தியின் மகனுமான சுகந்தன், அன்புமணி குறித்து விமர்சனம் செய்திருந்தார். இது தொடர்பாக பாமகவில் ராமதாஸ் மற்றும் அன்புமணி ஆதரவாளர்களிடையே சமூக வலைதளங்களில் ஒருவரை ஒருவர் விமர்சனப் பதிவுகளை பதிவேற்றம் செய்தனர். அந்த வகையில் சுகந்தன், திண்டிவனம் வந்தால் அவரை முற்றுகையிடுவோம் என பாமக மாநில இளைஞரணி துணைச் செயலாளரும் அன்புமணியின் ஆதரவாளருமான ராஜேஷ் முகநூலில் பதிவிட்டார். இதற்கிடையில் நேற்று திண்டிவனத்தில் உள்ள ராமதாஸ் வீட்டின் அருகே உள்ள தேநீர் கடையில் அன்புமணி ஆதரவாளரான ராஜேஷ் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த சமூக நீதிப் பேரவையின் மாநில துணைத் தலைவரும், ராமத ாஸின் ஆதரவாளருமான ராஜாராம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் முகநூல் பதிவு குறித்து தட்டிக்கேட்டதாக கூறப்படுகிறது. இதனால் இருதரப்பினருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திண்டிவனம் காவல் ஆய்வாளர் ஆனந்த ராஜ், இரு தரப்பினரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

இதைத்தொடர்ந்து இரு தரப்பினரும் திண்டிவனம் காவல் நிலையத்தில் பரஸ்பரம் புகார் அளித்துள்ளனர். இதற்கிடையில் ராமதாஸ் இல்லத்தில் பாதுகாப்புக்காக போலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.



## தேனி வாசவி மஹாலில் வைகுண்ட ஏகாதேசியை முன்னிட்டு திருப்பதி 7 மலைகள் குறித்து வில்லுப்பாட்டு மற்றும் கோலாட்டம் நடந்தது

தேனி, ஜன.01-

வைகுண்ட ஏகாதேசியை முன்னிட்டு தேனி பெரியகுளம் சாலையில் உள்ள வாசவி மஹாலில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடந்தது தொடர்ந்து ஆன்மீக சாதனையாளர் பிரதிஷ்ட கலா ரத்னா பெரம்பலூர் ராதாகிருஷ்ணனின் மாதங்களில் நான் மார்கழி என ஆன்மீக சொற்பொழிவு நடைபெற்றது. தொடர்ந்து திருமலை திருப்பதியின் ஏழு மலைகள் குறித்து வில்லுப்பாட்டு நடைபெற்றது அதனை தொடர்ந்து சிறப்புமிக்க கோலாட்டமும் நடைபெற்றது ஏராளமானோர் கலந்து கொண்டு இறையருள் பெற்றதோடு அனைவருக்கும் உணவு பிரசாதமாக வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் வைகுண்ட ஏகாதசி சமாராதனை குழு சிறப்பாக செய்திருந்தனர்.




## பழனியில்சுதந்திர போராட்ட தியாகி விஸ்வநாத தாஸ் நினைவு தினத்தை முன்னிட்டு முடி திருத்துவோர் நல சங்கம் சார்பாக திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி

திண்டுக்கல், ஜன.01-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் எஸ் எஸ் விஸ்வநாத தாஸ் முடி திருத்துவோர் நலச்சங்கம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நலச் சங்கம் சார்பாக மயில் ரவுண்டானா அருகே. சுதந்திரப் போராட்ட தியாகி எஸ்.எஸ்.விஸ்வநாத தாஸ் 85.ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி வீரவணக்கம் செலுத்தினர். மற்றும் இவர் விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பிறந்தவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நாடகக் கலையை ஆயுதமாக்கி மக்களிடையே தேசபக்தியை ஊட்டிய மகத்தான வீரர். அவர் ஒரு சிறந்த நாடகக் கலைஞர், பாடகர், நாடக ஆசிரியர் மற்றும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தனது குரலை உயர்த்தியவர்.தமிழ் நாடக உலகின் இமயம் என்று போற்றப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் அவரது ஆசான் என்று குறிப்பிடத்தக்கது. மற்றும் இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் ஐயப்பா மணி. மாவட்டச் செயலாளர் மாரியப்பன். பொருளாளர் காளிதாஸ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## கிறிஸ்துமஸ் அன்று 700 இடங்களுக்கு மேல் தாக்குதல் நடைபெற்றதாக கூறி மத்திய அரசுக்கு எதிராக விசிகவினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்




தாம்பரம், ஜன.01-

நாடு முழுவதும் கிறிஸ்துமஸ் தினத்தன்று பல்வேறு இடங்களில் வன்முறை தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படும் நிலையில் அதற்க்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பேருந்து நிலையம் அருகில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் பொறியாளர் சாமுவேல் எபினேசர் தலைமையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது

இதில் திமுக காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சியை சார்ந்த நிர்வாகிகள் கிறிஸ்தவ பங்கு தந்தைகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்

மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் கேரளா உட்பட பல மாநிலங்களில் 700 க்கும் மேற்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றது இதற்க்கு முக்கிய காரணம் மத்திய பாஜக அரசு என குற்றம் சாட்டியா தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, விசிக துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, மனிதநேய மக்கள் கட்சி துணை பொதுச்செயலாளர் யாகூப், மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன், திராவிட கழகம் தாம்பரம் முத்தையா, உள்ளிட்டோர் கண்டன உரையாற்றியனர்.

மேலும் இதில் விடுதலை சிறுத்தை கட்சியை சார்ந்த ஊடக மையம் மாநில துணைச் செயலாளர் தாம்பரம் கதிரவன், பொறியாளர் ஜெயச் சந்திரன் ராமானுஜம், ஆதி சாலமன், செல் சேகர், அமிர்தராஜ், அன்பு, யோவான், விமல், ராஜா.. பூவிழி, பியூலா, மகேஸ்வரி, பிரியங்கா மற்றும் ஏராளமான விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர்



■ நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி பிரகலாபுரம் ஐயப்பன் மாலை அணிவித்து பக்தர்கள் 11 ஆண்டுகளாக பாதயாத்திரை.

## விஜயகாந்த் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் கானா இன்னிசை நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா

தாம்பரம், ஜன.01-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த இரும்புலியூரில் கேப்டன் விஜயகாந்த் இரண்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தாம்பரம் தெற்கு பகுதி தேமுதிக சார்பில் கானா இன்னிசை நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் விழா தாம்பரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் கேட் எம் தர்மா தலைமையில் இந்த நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது



இந்த நிகழ்ச்சியை செங்கல்பட்டு மாவட்ட கழக துணை செயலாளர் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான மா.செழியன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவங்கி வைத்தார்

இதில் சிறப்பு அழைப் பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் கழக உயர்மட்ட குழு உறுப்பினர் அனகை முருகேசன், தலைமை கழக பேச்சாளர் தம்பி முருகன் ஆகியோர் கலந்து கொண்டு கழக கொடியேற்றி வைத்து விஜயகாந்த் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் இன்னிசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பார்த்து மகிழ்ந்தனர் அதனை தொடர்ந்து சிறப்புரையாற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியில் 62வது வட்டச் செயலாளர் இளங்கோ நன்றி உரையாற்றினார்



## ரேஷன் கார்டுதாரர்கள் கைரேகை, கருவிழி பதிவு செய்ய அறிவுறுத்தல் குடும்ப உறுப்பினர்களை உறுதி செய்ய அரசு உத்தரவு!

தேனி, ஜன.01-

தேனி மாவட்டத்தில் உள்ள ஏ.ஏ.ஒய், பி.எச்.எச். எனப்படும் அரிசி பெறும் ரேஷன் கார்டுகளில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கைரகை, கருவிழி, பதிவு செய்வது அவசியம் என அரசுஉத்தரவிட்டுள்ளது. எனவேஇவ்வகை கார்டுகளில்பெயர் உள்ளவர்கள் பயோமெட்ரிக் பதிவை உறுதி செய்ய கூட்டுறவதுத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.




## தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கவனத்திற்கு

தேனி, ஜன.01-

தேனி- குமுளி தேசிய நெடுஞ்சாலையில் ஆபத்தான விளம்பர பலகைகள் - நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை குறிப்பாக கா.புதுப்பட்டி, கூடலூர் இடையே உள்ள ஊத்துக்காடு பகுதிகளில் இரவு நேரங்களில் ஆபத்தான முறையில் விளம்பர பலகைகள் மற்றும் ஹோட்டல் பெயர் பலகைகள் அதிக அளவில் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் விபத்துகள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக பொதுமக்களும் விவசாயிகளும் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே தேசிய நெடுஞ்சாலையில் போதிய எச்சரிக்கை பலகைகள் இல்லாததால் விபத்துகள் அதிகரித்து வரும் நிலையில், வளைவுகள் மற்றும் விபத்து ஏற்படும் பகுதிகளில் விளம்பர பேனல்கள் வைக்கப்படுவது மேலும் ஆபத்தை ஏற்படுத்துவதாக கூறப்படுகிறது.

தற்போது சபரிமலை சீசன் காரணமாக வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ள நிலையில், உடனடியாக எச்சரிக்கை பலகைகள் அமைக்க வேண்டும் என்றும், விதிமீறி விளம்பர பலகைகள் வைப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உமன்ஸ் லீக் பவுண்டேஷன் நிறுவனர் திவ்யா சுவப்ணராஜ்க்கு INDIAN AWARDS நிகழ்ச்சியில் சிறந்த சமூக சேவை விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்

சென்னை, ஜன.01-

சென்னையை சேர்ந்த திவ்யா சுவப்பனராஜ் 8 வருடங்களுக்கு மேலாக உமன்ஸ் லீக் பவுண்டேஷன் என்ற தன்னார்வ இயக்கத்தை தொடங்கி அதன் மூலம் பல்வேறு மாற்று திறனாளிகள் மற்றும் பெண்கள் குழந்தைகள் என பல்வேறு சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.




அதேபோல் பின் தங்கிய பகுதிகளில் பள்ளி வகுப்பறை கட்டுதல், குடிநீர் அமைத்து கொடுத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் என சமூக மேம்பாடு திட்டங்களையும் முன்னணி நிறுவனங்களின் சமூக மேம்பாட்டு நிதியில் இருந்து பெற்று அந்த பணிகளையும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்.

இந்த நிலையில் Indian Media Works நிறுவனம் சார்பில் உமன்ஸ் லீக் ஃபவுண்டேஷன் நிறுவனர் திவ்யா சுவப்பனராஜ்யின் சேவைகளை பாராட்டி, அவரை கவுரவிக்கும் வகையில் Indian Awards 2025 சிறந்த சமூக சேவை விருதினை வழங்க முன்வந்தன. அதன்படி கடந்த 25ம் தேதி சென்னை சேத்பட்டில் உள்ள தனியார் அரங்கில் விருது வழங்கும் விழா நடைப்பெற்றது. இதில் நடிகர் யோகி பாபு, பத்திரிகையாளர் நக்கிரன் கோபால் உள்ளிட்ட நட்சத்தி ரங்கள் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினர்.

இந்த விருது வழங்கும் விழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள், குழந்தைகளின் வாழ்வாதரத்திற்கு உதவி செய்த உமன்ஸ் லீக் பவுண்டேஷன் நிறுவனர் திவ்யா சுவப்ணராஜ்க்கு INDIAN AWARDS 2025 சிறந்த சமூக சேவை விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.




■ திருமங்கலம் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்த புகைப்படம்







## காளையார்கோவில் ஓ எம் ஜி எஸ் பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம்

காளையார் கோவில், ஜன.01-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டாரம் ஓ எம் ஜிஎஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் சிறப்பு மருத்துவ முகாம் கூட்டுறவு துறை அமைச்சர் பெரியகருப்பன் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இம் முகாமில் 17 சிறப்பு மருத்துவத் துறைகள் மூலம் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்க ப்பட்டது. இங்கு ரத்த பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது. பொது மருத்துவம் கண் காது மூக்கு தொண்டை பல் எலும்பு நரம்பியல் மனநல மருத்துவம் சர்க்கரை நோய் நுரையீரல் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவர்கள் பரிந்துரைப்படி எக்கோ எக்ஸ்ரே ஸ்கேன் எடுக்கப்பட்டது. முகாமில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ வழிகாட்டுதலின்படி மாற்று த்திறன் மாணவர்களுக்கு மருத்துவ முகாம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. தேசிய அடையாள அட்டை தனித்துவம் வாய்ந்த அட்டை மறு மதிப்பீட்டு அட்டை இலவச பேருந்து பயண அட்டை இலவச ரயில் பயண அட்டை உதவி உபகரணங்கள் மாதாந்திர உதவித் தொகை பெற்று வழங்கப்பட்டது. முகாமை சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்க நிலை) ராஜேந்திரன் காளையார் கோவில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் லதாதேவி பொன்னி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெசிமா பேகம் பார்வையிட்டனர். இம்மருத்துவ முகாமிற்கு ஏற்பாடுகளை காளையார்கோவில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் கஸ்தூரிபாய் வட்டார ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் ஆசிரிய பயிற்றுநர்கள் பாத்திமா ஜோதிமணி கார்த்திக் மார்க்ரேட் சத்தியமூர்த்தி சிறப்பு ஆசிரியர்கள் ரேணுகாதேவி சாந்தி மலர் பீரம்மாள் ஸ்டெல்லா இயன்முறை மருத்துவர்கள் மற்றும் பகல் நேர பராமரிப்பு மைய ஆசிரியர் சுமதி ஸ்டெல்லா கணக்காளர் திருமுருகன் ஏற்பாடுகள் செய்திருந்தனர். இம்மருத்துவ முகாமில் பங்கேற்கும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர் களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. மதிய உணவு தேநீர் சிற்றுண்டி போக்கு வரத்து பயணப்படி மாண வர்களுக்கு வழங்கப் பட்டது. மருத்துவ முகாம் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161